மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

128—

விசைத்தறிப் பூங்கா

*43698—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி தொகுதி, சுப்புலாபுரம் கிராமத்தில் விசைத்தறிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாதவம் செய்தே இம்மாநிலம் பெற்ற; மேதினி போற்றும் மேன்மைமிகு திட்டங்கள் பற்பல தந்து பாங்குடனே மக்கள் போற்றும்; பல்கலை வித்தகம் பயின்ற பைந்தமிழ் தாரகை எங்கள் அம்மா!

பாராளுமன்றத் தேர்தலில் (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்த்த எதிரிகளையெல்லாம் தனி ஒரு சிம்மமாய் சின்னாபின்னமாக்கிய அரசியல் சாணக்கியர்; கழக நிரந்தரப் பொதுச் செயலாளர்; தமிழகத்தின் தன்னிகரில்லா தனிப்பெரும் தலைவி எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் வித்தகர் மாண்புமிகு இதய தெய்வம் தங்கத் தாரகை தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சராகப் பணியாற்ற மீண்டும் எனக்கு ஒரு வாய்ப்பு நல்கிய எங்களுடைய குல தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

அவர்கள் எழுப்பிய வினாவிற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதி, சுப்புலாபுரம் பகுதியில் ஏற்கெனவே பணிகள் தொடங்கப்பட்ட வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா செயல்படாத சூழ்நிலையில், மற்றுமொரு விசைத்தறி பூங்கா அமைக்க சாத்தியக்கூறுகள் தற்போது இல்லையெனினும், தொழில்முனைவோர் எவரேனும் முன்வரக்கூடிய சூழ்நிலையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு கோரிக்கையை எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும், மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு 'தீர்க்கதரிசி' என்பதை நிரூபிக்கின்ற வகையில் ஒரு பாடல் பாடியிருப்பார். அது 'வெற்றிமீது வெற்றி வந்து என்னைச் சேரும், அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் அம்மாவைச் சேரும்' என்ற பாடல். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு மிகப் பெரிய வெற்றியைப் பெற்று, சரித்திரம் படைக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு தத்துவத்தையும் சொல்லியிருக்கிறார்கள்.

மாபெரும் வெற்றி என்பது ஒரே நாளில் படைக்கிற அற்புதம் அல்ல. அது சிறு, சிறு வெற்றிகளின் கூட்டுத் தொகை என்ற தத்துவத்தை தமிழக முதல்வர் அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிறு, சிறு கூட்டுத் தொகையினுடைய வெற்றிகள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழகத்தில் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இன்றுவரை 'தொட்டில் குழந்தைத் திட்டம்' கொண்டுவந்து, 'மழைநீர் சேகரிப்புத் திட்டம்' கொண்டுவந்து, 1 கோடியே 86 இலட்சம் குடும்பங்களுக்கு

20 கிலோ விலையில்லா அரசி வழங்கி, 1 கோடியே 86 இலட்சம் குடும்பங்களுக்கு மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் வழங்கி, 1 கோடியே 76 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச சேலை வழங்கி, 1 கோடியே 75 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச வேட்டி வழங்கி, எண்ணற்ற வெற்றிகளின் காரணமாகத்தான், நாடாளுமன்றத் தேர்தலில் 39-க்கு 37 இடங்களைத் தமிழக மக்கள் வெற்றியாகக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக இருந்தபோது Hi-Tech Park *என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். தனியாரால் அந்தத் திட்டம் வேறு திட்டமாக மாற்றப்பட்டு மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் மீண்டும் அதே திட்டத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா எனக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-55

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஜவுளிப் பூங்கா அமைக்க குறைந்தபட்சம் 50 ஏக்கர் நிலமும், 25 தொழிற்கூடங்களும் அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு அமையும் ஜவுளிப் பூங்காவின் திட்ட மதிப்பீடு குறைந்தபட்சம் 60 முதல் 65 கோடி ரூபாய் வரை இருக்கவேண்டும். தற்போது நாடு முழுவதும் 61 ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கக்கூடிய வாய்ப்புகளை மத்திய, மாநில அரசுகள் சேர்ந்து, இணைந்து அனுமதி வழங்கியுள்ளது. இவற்றில் தற்போது 10 ஜவுளிப் பூங்காக்கள் தமிழகத்திலே இயங்கி வருகின்றன. தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதியிலே ஏற்கெனவே ஜவுளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டத்தில் ரூ.61.01 கோடி மதிப்பீட்டில் வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, மத்திய அரசு மானியத் தொகை ரூபாய் 2 கோடியே 44 இலட்சமும், மாநில அரசு மானியத் தொகை ரூபாய் 4 கோடியே 37 இலட்சமும் விடுவிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்ற நிலையில், அங்கே அந்தத் தொழில்நுட்பப் பூங்காவை அமைக்கக்கூடிய வகையிலே மத்திய அரசு ஆய்வு*

செய்து, அவை சரிவர செயல்படவில்லை என்ற ஒரு மதிப்பீடு செய்யப்பட்டு, மேற்கண்ட பூங்கா அமைவதற்கான பணிகள் தொடர இயலாத சூழ்நிலை உள்ளது. இப்பூங்கா திரும்பவும் செயல்படுவது தொடர்பாக மத்திய அரசின் திட்டக் குழு மறு ஆய்வு செய்து முடிவு செய்யவேண்டிய சூழ்நிலை உள்ளது. எனினும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆண்டிப்பட்டி தொகுதிக்குட்பட்ட கப்புலாபுரம் கிராமத்தில் புதியதாக விசைத்தறிப் பூங்கா அமைக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டதன்பேரில், மீண்டும் மறு ஆய்வு செய்து, தொழில்முனைவோர்கள் எவரேனும் முன்வரக்கூடிய நிலையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

129—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சமுதாயக் கூடம்

***26851—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், குராயூர், முனியாண்டிபுரம், வில்லூர் ஆகிய கிராமங்களில் நாட்கோ நிதியில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?